(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**STC.No.336/2025**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.3 (LW.2 )

| | | |
|---|---|---|
| Name | : | சேகர் |
| Father's/Husband Name | : | கணபதி |
| Village | : | திருச்செங்கோடு |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Occupation | : | பில்டிங் கான்ட்ராக்டர் |
| Age | : | 57 |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of **17.06.2026.**

**முதல் விசாரணை:-**

1) கடந்த 21.02.2025-ம் தேதி காலை சுமார் 7.45 மணியளவில் நானும் எனது நண்பன் கிருஷ்ணன் என்பவரும் இருசக்கர வாகனத்தில் வண்டியை நான் ஓட்ட பின்னால் அவரை உட்காரவைத்துக்கொண்டு திருச்செங்கோடு அண்ணாசிலை அருகே கூட்டமாக இருந்தது. என்னவென்று அருகில் சென்று பார்த்தபோது அரசுப்பேருந்து ஒன்று நின்றுகொண்டிருந்தது. அங்கு ஒருவர் அடிபட்டு கீழே கிடந்தார். சம்பவத்தை நான் பார்க்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது .**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:—**

ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 21.02.2025—ம் தேதி காலை சுமார் 7.45 மணியளவில் எனது சொந்த வேலை காரணமாக இருசக்கர வாகனத்தில் திருச்செங்கோடு அண்ணாசிலை அருகே சென்றுகொண்டிருந்தபோது இஸ்ரேல் என்பவர் வீட்டிற்கு செல்வதற்காக வேலூர் to திருச்செங்கோடு ரோட்டை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றபோது இறையமங்கலத்திலிருந்து திருச்செங்கோடு புதிய பேருந்து நிலையம் செல்வதற்காக வந்த அரசுப்பேருந்து TN 30 N 0772 பேருந்தின் ஓட்டுநர் எவ்வித சிக்னலும் கை அசைவும் செய்யாமல் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்துஅண்ணாசிலை வலதுபுறமாக ஒருவழிப்பாதை வழியாக திரும்பி சென்றதால் ரோட்டின் ஓரமாக சென்றுகொண்டிருந்தவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதின் பேரில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:—

நானும் எனது ஊரைச்சேர்ந்த கிருஷ்ணன் என்பவரும் ஒன்றாகத்தான் சென்றோம் என்றால் சரிதான். நான் பார்த்ததை தான் அவரும் பார்த்தார் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**:— இல்லை

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.17 20:15:42 +0530